2013 ஏப்ரல் 25]

அந்தப் பகுதிகளில் உரிய வேலைகள் நடைபெறும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 315, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

315—

கால்நடைக் கிளை நிலையம்

***5620—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், அமராவதி நகரில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் வட்டம், அமராவதி நகர் கிராமத்திலே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்தக் கிராமத்திலே 3,000 கால்நடை அலகு இருந்தாலே போதும். அங்கே அதற்கும் அதிகமாக 5,700 கால்நடை அலகுகள் இருக்கின்ற காரணத்தினால் நிச்சயமாக முடியாது, இயலாது என்பதையெல்லாம் அகராதியிலே அறியாத மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நிச்சயமாக அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையத்தை அமைத்துத் தரும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

> *"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்*
> *யாவுள முன்நிற் பவை."*

நூல் அறிவுடன் இயற்கையான மதிநுட்பம் உள்ளவருக்கு முன்னால் எந்த சூழ்ச்சியும் எதிர்த்து நிற்க முடியாது என்ற தெய்வப் புலவன் திருவள்ளுவரின் பொய்யாமொழிக்கிணங்க (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் நலனே தன் நலன், தமிழர்களின் இழுக்கு தன் இழுக்கு என்று அல்லும், பகலும் அயராது பாடுபட்டு வரும் எங்கள் இதய தெய்வம், மூன்றாவது முறையாக அரியணையிலே அமர்ந்து அரசாட்சி செய்யும் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகின்றேன்.

மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள அமராவதி நகரில் அரசு விதிகளுக்குட்பட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தருகிறேன் என்று கூறியதற்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை இந்த ஆண்டே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துவங்க முன்வருவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

மடத்துக்குளம் வட்டாரத்திலுள்ள எம்.ஜி.புதூர், சங்கமநல்லூர் பேரூராட்சியில் கால்நடை துணை நிலையம் அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மேலும், உடுமலைப்பேட்டையில் கோழிக்குஞ்சு பொறிப்பகம் அமைக்க ரூ.45 இலட்சம் செலவில் நிதி ஒதுக்கப்பட்டு, இன்னும் பணிகள் துவங்கப்படாமல் உள்ளன. அதைப்போலவே, பல்லடம் தொகுதி, பல்லடம் நகரில் கால்நடைத் துறைக்குச் சொந்தமான நான்கு ஏக்கர் நிலத்தில் கோழி ஆராய்ச்சி மையம் அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணையிட்டு, இன்னமும் பணிகள் துவக்கப்படாமல் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஒரு துணைக் கேள்வி மட்டும்தான் கேட்க வேண்டும்.

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கால்நடை துணை

2013 ஏப்ரல் 25]

நிலையம் அமைக்க முன்வருவார்களா எனக் கேட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகளில் கால்நடைக் கிளை நிலையம் தேவைப்படுகின்றது என்பதையெல்லாம் எங்கள் துறை ஆய்வு செய்து வருகின்றது. அந்த ஆய்வுகள் முடிவடைந்தவுடன் மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியைப் பெற்று, விரைவிலே கால்நடைக் கிளை நிலையங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோழிக்குஞ்சு பொறிப்பகம் மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு உறுப்பினருடைய கோரிக்கையை எடுத்துச் சென்று, துறை பரிசீலிக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 316, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

316—

குளிர்சாதனப் பேருந்து

***21036—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளியிலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*